**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 குரோதி வருடம் பங்குனி திங்கள் 04-ம் நாள்**

**S.T.C. No. 322/2018**
(குற்ற எண்.189/2017, தேவகோட்டை நகர் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தேவகோட்டை நகர் காவல்நிலையம்,
குற்ற எண்.189/2017.

....குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.கண்ணன் (54/2018)
த/பெ. நாகலிங்கம்

.....எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>தேவகோட்டை நகர் காவல்நிலையம்,<br>குற்ற எண்.189/2017. |
| 2. | எதிரிகள் | 1.கண்ணன்<br>த/பெ. நாகலிங்கம் |

<table>
<tr><td></td><td></td><td colspan="3"><u>முகவரி:</u><br>கதவு எண். 26, கோட்டைமேடு தெரு, இராமநாதபுரம்.</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="3">எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338(2 எண்ணம்)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="3">19/03/2017</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">20/03/2017</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td rowspan="2">எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td>21/03/2017</td><td colspan="2" rowspan="2">முன்பிணை பெற்ற நாள்:இல்லை</td></tr>
<tr><td>21/03/2017<br>Bailed by Police</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">07/03/2018</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">31/08/2018</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td rowspan="2">10.</td><td rowspan="2">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>12/10/2018</td><td>12/10/2018</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.2 | 12/10/2018 | 12/10/2018 |
| | | அ.சா.3 | 12/10/2018 | 12/10/2018 |
| | | அ.சா.4 | 23/11/2018 | 23/11/2018 |
| | | அ.சா.5 | 23/11/2018 | 23/11/2018 |
| | | அ.சா.6 | 23/12/2020 | 23/12/2020 |
| | | அ.சா.7 | 12/06/2024 | 12/06/2024 |
| | | அ.சா.8 | 12/11/2025 | 12/11/2025 |
| | | அ.சா.9 | 03/03/2026 | - |
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 18/11/2025, 05/03/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 31/08/2018 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 05/03/2025 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 18/03/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 279, 338(2 எண்ணம்)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை** | | |

| | | |
|---|---|---|
| | | **குவிமுச பிரிவு 255(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.பெரியசாமி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 19.03.2017ம் தேதி 18.45 மணிக்கு இவ்வழக்கின் வாதியான கருப்பையாவும் அவரது பேத்தி ரம்யா என்பவரும் தேவகோட்டை ST. Mary's பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் இடதுபுறமாக காரைக்குடியில் இருந்து தேவகோட்டை நோக்கி Bajaj Discover 3738 இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் மீது எதிரி TN 63 N 1734 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தை அதிக வேகமாகவும் கவனக்குறைவாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து மோதி வாதி கருப்பையாவுக்கும் அவரது பேத்தி ரம்யா என்பவருக்கும் கொடுங்காயம்

ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338 (2 எண்ணங்கள்)-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338(2 எண்ணம்)-ன் கீழ் குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ 10 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 கருப்பையா தனது சாட்சியத்தில் கடந்த 19/03/2017 ஆம் தேதி மாலை 5:30 மணியளவில் தனது பேத்தி ரம்யா மதுரையில் உள்ள அல்ட்ரா காலேஜிலிருந்து

லீவுக்கு தன் மகள் வெள்ளையம்மாள் வீட்டிற்கு வந்திருந்தவரை தான் தனது வீட்டிற்கு தான் TN 63 Q 37 38 என்ற Suzuki வண்டியில் ஏற்றிக்கொண்டு தான் வண்டியை ஓட்ட வண்டியின் பின்னால் ரம்யாவை ஏற்றுக்கொண்டு தான் வந்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது ரஸ்தா பக்கம் ரயில்வே கேட் ரயில் செல்வதற்காக அடைத்து இருந்தது என்றும் பின்னர் ரயில்வே கேட்டு திறந்த உடன் தாங்கள் தேவகோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தோம் என்றும் அப்போது தேவகோட்டை சென்மேரிஸ் இருபாலர் படிக்கக்கூடிய பள்ளியின் எதிரே மாலை 6:45 மணி அளவில் ரோட்டின் இடதுபுறம் வந்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது தங்கள் பின்னால் ஒரு அரசு பேருந்து காரைக்குடியில் இருந்து ராமேஸ்வரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது என்றும் அந்த அரசு பேருந்தின் நம்பர் தனக்கு ஞாபகம் இல்லை என்றும் அந்த அரசு பேருந்தானது அதிவேகமாகவும், ஆரன் அடிக்காமலும், எந்த முன் எச்சரிக்கையும் இல்லாமலும் வந்து தனது பைக்கில் மோதியது என்றும் அவ்வாறு மோதியதில் தாங்கள் இருவரும் கீழே விழுந்து அதில் தனது வலது கை சுண்டுவிரல், நடுவிரல், மோதிர விரலில் பலத்த காயம், வலது இடுப்பில் காயமும், வலது நெற்றியில் காயமும் ஏற்பட்டது என்றும் ரம்யாவுக்கு இடது காலில் தோல் எடுத்து காயமும், இடது புஜத்தில் காயமும், இடது காதில் காயமும், இடது புற கால் தொடையில் கிழித்து காயமும் ஏற்பட்டது என்றும் பின்னர் ஒரு ஆட்டோவில் முதலுதவி செய்ய தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் பின்னர் தங்களது உறவினர்கள் வந்து தங்களை காரைக்குடியில் உள்ள காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்

என்றும், அங்கும் முதலுதவி செய்துவிட்டு மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு தாங்கள் சிகிச்சைக்கு சென்றோம் என்றும் பின்னர் தேவகோட்டை டவுன் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் 21 ஆம் தேதி அங்கு வந்து தன்னை விசாரித்தார்கள் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும் தனது வலது கை விரல்களில் அடிபட்டதால் தான் கையெழுத்து போடாமல் இடதுகை பெருவிரல் ரேகை அதில் வைத்தேன் என்றும் தனக்கு வலது கை பழக்கமாகும் என்றும் இடதுகை பழக்கம் இல்லை என்றும் தான் அங்கு 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றும் ரம்யா 40 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றும் மேற்படி தான் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 என்றும் மேற்படி அரசு பேருந்து ராமநாதபுரத்தைச் சேர்ந்த கண்ணன் என்ற நபர் ஓட்டி வந்தார் என்றும் அவர்தான் விபத்தை பேருந்து ஓட்டி வந்தார் என்றும் மேற்படி பேருந்து விபத்திற்கு அரசு பேருந்தின் டிரைவரே காரணமாகும் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 முருகன் தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 19/03/2017 ஆம் தேதி சாயந்திரம் மாலை 6:45 மணி அளவில் செயின்ட் மேரி ஸ்கூல் காம்பவுண்ட் பக்கம் ஆட்டோவை நிறுத்தி நின்று கொண்டிருந்தேன் என்றும் அப்போது ஸ்கூலுக்கு எதிர்ப்புறம் உள்ள ரோட்டில் ராம் நகரிலிருந்து தேவகோட்டையை நோக்கி மேற்படி காயம்பட்ட நபர்கள் கியர் பைக்கில் இரு சக்கர வாகனத்தில் அவர்கள் இடதுபுரத்தில் வந்து கொண்டிருந்தார்கள் என்றும் மேற்படி வாகனத்தை கருப்பையா ஓட்டினார்

என்றும் அவர் பின்னால் அவரது பேத்தி ரம்யா இருந்தார் என்றும் அப்போது அவர்களுக்கு பின்னால் ஒரு அரசு பேருந்து வேகமாக வந்து அவர்கள் மீது மோதியது என்றும் அந்த அரசு பேருந்து நம்பர் ஞாபகம் இல்லை என்றும் ஆஜர் எதிரி தான் அந்த அரசு பேருந்தை ஓட்டினார் என்றும் அவ்வாறு மோதியதில் காயம்பட்ட இரண்டு பேரும் கீழே விழுந்தார்கள் என்றும் தான் பார்த்ததில் ரம்யாவிற்கு இடது பக்க கை, காலில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும் கருப்பையாவிற்கு வலது பக்க இடுப்பு, கால், கையில் அடிபட்டு இருந்தது என்றும் இருவரும் ரத்த காயத்துடன் இருந்தார்கள் என்றும் பின்னர் தான் அவர்களை ஆட்டோ எடுத்து வந்து தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன் என்றும் பின்னர் அவர்களது சொந்தக்காரர்கள் வந்து அவர்களை அழைத்து சென்று விட்டார்கள் என்று போலீசார் வந்து தன்னை விசாரித்தார்கள் என்றும் தனது ஆட்டோ நம்பர் TN 63 AN 91 64 ஆகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 கலைச்செல்வன் தனது சாட்சியத்தில் கடந்த 19/03/2017 ஆம் தேதி சுமார் இரவு 7:30 மணி முதல் 8 மணிக்குள் ரம்யா தனக்கு போனில் தொடர்பு கொண்டார் என்றும் அவர் போனில் தன்னிடம் தானும் தனது தாத்தாவும் பைக்கில் வந்த போது அரசாங்க பேருந்து மோதி தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் சொன்னார் என்றும் தான் பக்கத்தில் மாவிடுத்திற்கோட்டை நெட்டேந்தல் கிராமத்தில் இருந்தேன் என்றும் பின்னர் தனக்கு சொந்தமான காரில் மேற்படி அரசு மருத்துவமனைக்கு வந்தேன் என்றும் தான் அங்கு வந்து தனது மாமா

கருப்பையா விடமும் ரம்யாவிடமும் விபத்து பற்றி கேட்டேன் என்றும் அவர்கள் தன்னிடம் செயின்ட் மேரிஸ் பள்ளிக்கு எதிர் புறத்தில் வைத்து விபத்து நடந்ததாக சொன்னார்கள் என்றும் அரசு பேருந்து மூலம் விபத்து நடந்ததாக சொன்னார்கள் என்றும் பின்னர் அந்த அரசு மருத்துவமனையில் உரிய சிகிச்சை அளிக்காதது போல் தெரிந்ததால் காரைக்குடி காவேரி தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும் பின்னர் அங்கு முதல் உதவி செய்துவிட்டு அப்பல்லோ ஆம்புலன்ஸை வரவழைத்து மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றும் மேற்படி விபத்திற்கு அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர் காரணம் என்று சொன்னார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4 ராமச்சந்திரன் தனது சாட்சியத்தை கடந்த 21/03/2017 ஆம் தேதி காலை சுமார் 7:30 மணியளவில் தான் தேவகோட்டை சென்மேரிஸ் பஸ் ஸ்டாப் பக்கம் நின்று கொண்டிருந்தேன் என்றும் தன்னுடன் நாகப்பன் நின்று கொண்டிருந்தார் என்றும் அப்போது தேவகோட்டை நகர காவல் நிலையத்திலிருந்து போலீசார் அங்கு வந்து வாகனம் மோதிய இடத்தை பார்த்து தங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும் மேற்படி போலீசார் மேப் ஒன்று வரைந்து கையெழுத்து பெற்றார்கள் என்றும் தானும் நாகப்பனும் கையெழுத்து போட்டோம் என்றும் மேற்படி

பார்வை மகஜர் அ.சா.ஆ.2 என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5 நாகப்பன் தனது சாட்சியத்தில் கடந்த 21/03/2017 ஆம் தேதி காலை சுமார் 7:30 மணியளவில் தான் தேவகோட்டை சென்மேரிஸ் பஸ் ஸ்டாப் பக்கம் நின்று கொண்டிருந்தேன் என்றும் தன்னுடன் ராமச்சந்திரனும் நின்று கொண்டிருந்தார் என்றும் அப்போது தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் அங்கு வந்தார்கள் என்றும் அவர்கள் அந்த ரோட்டில் நடந்த விபத்து இடத்தை பார்த்து குறித்துக் கொண்டார்கள் என்றும் தங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் தானும் ராமச்சந்திரனும் கையெழுத்து போட்டோம் என்றும் மேற்படி பார்வை மகஜரில் கண்ட தனது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.7 வசந்த்குமார் தனது சாட்சியத்தில் தான் தற்போது மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் அவசர பிரிவு மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன் என்றும் தனது மருத்துவமனையில் பணிபுரிந்த பாரத், ஆதித்யா ஆகியோர்கள் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்று தனக்கு தெரியவில்லை என்றும் தான் தனது மருத்துவமனையில் தனக்கு வழங்கிய அனுமதியின் அடிப்படையில் மருத்துவ

சான்றின் அடிப்படையில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றும் கடந்த 19/03/2017 ஆம் தேதி சாட்சி ரம்யா என்பவர் தங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்துள்ளார் என்றும் அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு மருத்துவர் சதீஸ்லால் அவர்கள் சிகிச்சை அளித்துள்ளார் என்றும் அவருக்கு சாட்சி ரம்யாவிற்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்துள்ளது என்றும் இடது கால் முன்பகுதியில் 15x7 சென்டிமீட்டர் அளவில் தோல் வரண்டும் தசைகள் தளர்ந்தும் காணப்பட்டது என்றும் இடது தொடை பகுதியின் சிராய்ப்பு காயம் இருந்துள்ளது என்றும் வலது தோள்பட்டையில் மற்றும் இடது முழங்கையில் சிராய்ப்பு காயம் இருந்துள்ளது என்றும் வலது முட்டி மற்றும் வலது காலில் சிராய்ப்பு காயம் இருந்துள்ளது என்றும் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை முடிவில் கடந்த 22/03/2017 ஆம் தேதி விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் சாட்சி ரம்யாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டுள்ளது என்றும் அ.சா.1 கருப்பையா என்பவர் தங்கள் மருத்துவமனைக்கு கடந்த 19/03/2017 ஆம் தேதி சிகிச்சைக்கு வந்துள்ளார் என்றும் அவரை மருத்துவர் சதீஸ்லால் அவர்கள் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்துள்ளார் என்றும் ஏற்பட்ட காயம் வலது கையில் 3-5 வரையிலான விரல்களில் சிதைந்து காயம் இருந்துள்ளது என்றும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.7) அ.சா.8 உலகநாதன் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து

சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடத்தை அ.சா.ஆ.7 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை அ.சா.ஆ.8 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

(5.8) அ.சா.9 பாண்டி தனது சாட்சியத்தில் தான் தற்போது தேவகோட்டைநகர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் தனக்கு சார்பு ஆய்வாளர் திரு.உலகநாதன் அவர்களையும் அவர் கையெழுத்தையும் நன்கு தெரியும் என்றும் அதன்அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சார்பு ஆய்வாளர் கடந்த 21/03/2017 ம் தேதி குற்ற எண் 189/2017-ல் இதச பிரிவு 279, 338 ன் வழக்கின் விபத்துக்குள்ளான வாகனமாக TN 63 Q3738 வாகனத்தின் வாகன ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி விபத்துக்குள்ளான வாகனத்தின் ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.9 என்றும் பின்பு விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 63 N 1734 அரசு பேருந்தை வாகன தணிக்கைக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெற்றுள்ளார் என்றும் மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.10 குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தனது

தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) கடந்த 19/03/2017-ம் தேதி 18.45 மணிக்கு தேவகோட்டை சென்மேரிஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் இடது புறமாக காரைக்குடியில் இருந்து தேவகோட்டை நோக்கி TN 63 Q 3738 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த கருப்பையா மற்றும் அவரது பேத்தி ரம்யா மீது எதிரி ஓட்டி வந்த TN 63 N 1734 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மோதி மேற்படி இருவருக்கும் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும்.

(8.2) இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும் புகார்தாரருமான அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் ஆஜர் எதிரி தான் அரசு பேருந்து ஓட்டி வந்த நபர் என்றும் கடந்த 19/03/2017 ஆம் தேதி மாலை 5:30 மணியளவில் தன்னுடைய பேத்தி ரம்யாவை TN 63 Q 3738 என்ற இருசக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து

கொண்டிருந்ததாகவும் தேவகோட்டை சென்மேரிஸ் பள்ளி எதிரே மாலை 6:45 மணியளவில் ரோட்டில் இடது புறமாக வந்து கொண்டிருந்தபோது தங்களது பின்னால் அரசு பேருந்து காரைக்குடியில் இருந்து இராமேஸ்வரத்தை நோக்கி வந்து கொண்டிருந்ததாகவும் மேற்படி பேருந்து அதிவேகமாகவும் ஆரன் அடிக்காமலும் எந்த முன்னெச்சரிக்கையும் இல்லாமல் வந்து தனது பைக்கில் மோதியதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு பேருந்து அதிவேகமாக வந்து தனது பைக்கில் மோதியதாக சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்குப்படி பேருந்தானது இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதியுள்ள நிலையில் அ.சா.ஆ.9 இரு சக்கர வாகன ஆய்வறிக்கையின்படி இரு சக்கர வாகனத்தின் பக்கவாட்டு லக்கேஜ் டப்பா சேதம் அடைந்துள்ளதாகவும், ஹெட்லைட்-ன் கவசம் உடைந்து இருப்பதாகவும், முன்பக்க சக்கரத்தின் மட்கார்டில் கீறல்கள் இருப்பதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்குப்படி இருசக்கர வாகனத்தின் பின்புறம் அரசு பேருந்து வேகமாக வந்து மோதியதாக சொல்லப்படும் நிலையில் இரு சக்கர வாகனத்தின் பின்புறம் எந்தவித சேதங்களும் இருந்ததாக அ.சா.ஆ.9 வாகன ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இந்த தருணத்தில் சம்பவம் நடந்த ரோட்டில் சம்பவ இடத்திற்கு அருகில் பள்ளம் இருந்தது என்பதை அ.சா.1, 2 ஆகியோர் அவர்களுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளதையும் அவ்வாறு பள்ளத்தில் விழுந்து கீழே விழுந்ததில் தான் அ.சா.1 க்கும் அவருடைய பேத்திக்கும் காயங்கள் ஏற்பட்டது என்ற எதிரி தரப்பு வாதமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

(8.3) மேலும் அ.சா.1ன் சாட்சியத்தில் அரசு பேருந்து அதிவேகமாக வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதிவேகம் என்பதை வரையறுக்கும் விதமாகவும் விளக்கும் விதமாகவும் இவ்வழக்கில் சாட்சியங்கள் ஏதும் அமையவில்லை. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் இருசக்கர வாகனத்தில் இடதுபுறத்தில் கருப்பையாவும், ரம்யாவும் வந்து கொண்டிருந்ததாகவும் அவர்களுக்கு பின்னால் அரசு பேருந்து வேகமாக வந்து அவர்கள் மீது மோதியதாகவும் சாட்சியமளித்துள்ள போதிலும் அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் காயம்பட்ட நபர் ஓட்டிச் சென்ற வாகனத்தில் அரசு பேருந்தின் இடது புறத்தில் உள்ள முன் பின் படிக்கட்டுகளுக்கு நடுவில் இடித்ததாகவும் அந்த இடித்த சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் தான் நின்ற இடம் சம்பவ இடத்திற்கும் பஸ்சிற்கும் நேர் எதிர் திசை என்றும் தான் நின்ற பகுதியில் இருந்து பஸ்ஸின் இடது புறம் நடந்த சம்பவம் என்ன என்பது தனக்குத் தெரியாது என்றும் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே உண்மையிலேயே அ.சா.2 சம்பவத்தை நேரடியாக பார்த்தாரா அல்லது சம்பவம் நடந்த பிறகு பார்த்தாரா என்ற சந்தேகம் எழுகிறது. ஆகவே அ.சா.2ன் சாட்சியத்தை கொண்டு சம்பவம் எவ்வாறு ஏற்பட்டது யாருடைய கவனக்குறைவாலும், அலட்சியத்தாலும் ஏற்பட்டது என்பதை தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கில் மற்றொரு பாதிக்கப்பட்ட நபரும் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியுமான பட்டியல் சாட்சி 2 ரம்யா அரசு தரப்பில் விசாரிக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளார். ஏனைய சாட்சிகளில் அ.சா.3 மற்றும் 6

ஆகியோர் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவர். எனவே சம்பவம் எதிரியின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் தான் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத்தவறியுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(8.4) இவ்வழக்கில் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலமானது 20/03/2017 ஆம் தேதி மாலை 4:30 மணிக்கு மருத்துவமனையில் பெறப்பட்டதாக அ.சா.ஆ.1 புகாரில் மேற்குறிப்பு செய்யப்பட்டு அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையிலும் அவ்வாறே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் காரைக்குடியில் உள்ள காவேரி மருத்துவமனையில் முதலுதவி செய்துவிட்டு மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும் பின்னர் தேவகோட்டை டவுன் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் 21 ஆம் தேதி அங்கு வந்து தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் போலீசார் 21/03/2017 அன்று மருத்துவமனைக்கு வந்ததாகவும் சம்பவத்தின் மறுநாள் வரவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்திலும் குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் போலீசார் 21/03/2017-ல் தான் வந்ததாக கூறும் நிலையில் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் 20/03/2017 -ல் பெறப்பட்டதாக அரசு தரப்பு வழக்கில் சொல்லப்பட்டுள்ளது சந்தேகத்திற்கு இடமான விதத்தில் அமைந்துள்ளது.

(8.5) மேலும் இவ்வழக்கு சம்பவத்தில் அ.சா.1 ம் பட்டியல் சாட்சி 2 ரம்யாவுக்கும் கொடுங்காயம் ஏற்பட்டதாக சான்று வழங்கப்பட்டுள்ளதாக அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.7 ன் சாட்சியத்தில் பாதிக்கப்பட்ட இருவருக்குமே சிராய்ப்பு காயம், சிதைந்த காயம் போன்ற காயங்கள் ஏற்பட்டதாகவும் தோல் வறண்டும் தசைகள் தளர்ந்தும் காணப்பட்டதாகவுமே சாட்சியமளித்துள்ளார். மேலும் சம்பவமானது 19/03/2017-ல் நடைபெற்றுள்ள நிலையில் காயம்பட்ட ரம்யா 22/03/2017-ல் சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது அ.சா.7 ன் சாட்சியத்தில் இருந்தும் அ.சா.ஆ.4 காயச்சான்றிலிருந்தும் தெரிய வருகிறது. அதேபோல் அ.சா.1 கருப்பையாவும் சிகிச்சை முடிந்து 22/03/2017 -ம் தேதி விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது அ.சா.ஆ.5 காயச்சான்றில் இருந்து தெரிய வருகிறது. மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து சென்ற பிறகு அ.சா.1 மற்றும் பட்டியல் சாட்சி 2 ரம்யா ஆகியோர் அவர்களுடைய அன்றாட காரியங்களை செய்ய முடியாத நிலையிலோ அல்லது அதிகப்படியான உடல்வலியிலோ 20 நாட்கள் இருந்தார்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக இந்த வழக்கில் எந்த சாட்சியமும் அமையவில்லை. எனவே அ.சா.ஆ.4 மற்றும் 5 காயச்சான்றுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டுள்ள போதிலும் அவற்றில் கண்டுள்ள காயங்கள் இதச பிரிவு 320-க்கு உட்பட்ட கொடுங்காயங்களாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்கண்ட விவாதங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் முரண்பாடுகளையும் கருத்தில் கொள்கையில் சம்பவமானது எதிரியின்

கவனக்குறைவாலும் அலட்சியத்தாலும் தான் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறி உள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை பெற எதிரி தகுதி உடையவர் ஆகிறார்.

**9. முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 279, 338(2 எண்ணம்)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA

Digitally signed by POORNIMA
Date: 2026.03.18 18:02:24 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | கருப்பையா | அ.சா.1 | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்டவர் |
| 2. | முருகன் | அ.சா.2 | கண்ணுற்ற சாட்சி |
| 3. | கலைச்செல்வம் | அ.சா.3 | கேள்விப்பட்ட சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 4. | ராமச்சந்திரன் | அ.சா.4 | பார்வை மகஜர் சாட்சி |
| 5. | நாகப்பன் | அ.சா.5 | பார்வை மகஜர் சாட்சி |
| 6. | கண்ணன் | அ.சா.6 | கேள்விப்பட்ட சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 7. | வசந்தகுமார் | அ.சா.7 | மருத்துவர் |
| 8. | உலகநாதன் (சார்பு ஆய்வாளர்) | அ.சா.8 | விசாரணை அதிகாரி |
| 9. | பாண்டி(சிறப்பு சார்பு ஆய்வாளர்) | அ.சா.9 | தற்போதைய விசாரணை அதிகாரி |

## Judicial Form No. 68

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No of the exhibit | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | 12/10/2018 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜர் | 23/11/2018 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையெழுத்து | 23/11/2018 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | சாட்சி ரம்யாவின் காயச்சான்று | 12/06/2024 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | அ.சா.1 | 12/06/2024 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கருப்பையாவின் காயச்சான்று | | | | |
| 6. | முதல் தகவல் அறிக்கை | 12/11/2025 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | மாதிரி வரைபடம் | 12/11/2025 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |
| 8. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 12/11/2025 | அ.சா.ஆ.8 | அரசு தரப்பு | அசல் |
| 9. | TN 63 Q 3738 வாகனத்தின் வாகன ஆய்வாளர் அறிக்கை | 03/03/2026 | அ.சா.ஆ.9 | அரசு தரப்பு | அசல் |
| 10. | TN 63 N 1734 வாகனத்தின் வாகன ஆய்வாளர் அறிக்கை | 03/03/2026 | அ.சா.ஆ.10 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.03.18 18:02:35 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.